# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை யூலை 2022.07.21

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டின் யூலை மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் 2022.07.21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.48 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் ஒரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளை கீழ்க்காணும் அங்கத்தவர்கள் சமூகமாகியிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் சுப்பையா பத்மநாதன்
2. கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா
3. கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி
4. கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ்
5. கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி
6. கௌரவ உறுப்பினர் அனுஷாவதி இதயதாஸ்
7. கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா
8. கௌரவ உறுப்பினர் சந்திரகுமார் ரஜனிதேவி
9. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
10. கௌரவ உறுப்பினர் இராமன் சேனாதிராசா
11. கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன்
12. கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ்
13. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம்
14. கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா
15. கௌரவ உறுப்பினர் சரவணமுத்து தனபாலசிங்கம்
16. கௌரவ உறுப்பினர் சசிகலாதேவி ரவி
17. கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம்
18. கௌரவ உறுப்பினர் சுபத்திரா ஜெயசீலன்
19. கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன்
20. கௌரவ உறுப்பினர் சொக்கலிங்கம் சபேசன்
21. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன்
22. கௌரவ உபதவிசாளர் பொன்னம்பலம் இராசேந்திரம்
23. கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை
24. கௌரவ உறுப்பினர் சுபாஸ்கரன் சந்திரமதி
25. கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா
26. கௌரவ உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன்
27. கௌரவ உறுப்பினர் மரியதாசன் ஜோசெப் இதயராஜ்

- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமை உரையிலே இன்றைய 51 வது கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், சபையின் செயலாளர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரையும் வரவேற்று தனது காலை வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

- ❖ தொடர்ந்து கௌரவ உறுப்பினர்களான கந்தசாமி மயூரதன், பொன்னம்பலம் ஆதவன் ஆகியோர் சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியாதுள்ளதாக அறியத் தந்துள்ளார்கள் எனக் கூறி அவர்களது விடுமுறையினை அனுமதிப்பதற்கு கௌரவ தவிசாளர் சபைக்குச் சமர்ப்பித்தார்.

- ❖ கௌரவ உறுப்பினர்களான கந்தசாமி மயூரதன், பொன்னம்பலம் ஆதவன் ஆகியோர்களின் விடுமுறைகளினை அனுமதிக்கலாமென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- ❖ கௌரவ உறுப்பினர்களான இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா, பாக்கியநாதர் மரியதாஸ், ஐயாத்துரை மயூரன் ஆகியோர் காலை 09.54 மணிக்கு வருகை தந்தனர்.

- தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமையுரையிலே தற்போதைய சூழ்நிலையிலும் சபையின் செயற்பாடுகள் தடையின்றி முன்னெடுத்துச் செல்ல ஒத்துழைப்பு வழங்கிய கௌரவ உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது

நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்ததுடன், எமது பிரதேச மக்களின் மீள்குடியேற்றமே எமது பிரதான இலக்காக இருக்கும். இது தொடர்பாக 17/19.05.2022 ஆம் இலக்க தீர்மானம் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சீ.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கௌரவ பிரதம மந்திரி அவர்களுக்கு மொழிபெயர்ப்பு செய்து அனுப்பி வைத்ததுடன் அதன் பிரதியை எமக்கு அனுப்பி வைத்துள்ளார் என தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன் அவர்கள் காலை 10.01 மணிக்கு வருகை தந்தார்.

- தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் 16.06.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையை அங்கீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்டது.

❖ கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் காலை 10.03 மணிக்கு வருகை தந்தார்.

▪ யூன் மாதம் 16.06.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையில் கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் ஏனைய விடயங்களில் கலந்துரையாடப்பட்ட பலாலி தெற்கு காணியின் உரிமையாளர்களை அறிந்து கொள்ளமுடியவில்லை என்றும் காணியில் வசிப்பவர்கள் காணியினை விற்பனை செய்துள்ளனர். அங்கு மதில் அமைக்கப்பட்டு வருவதுடன் கட்டிட வேலைகளும் இடம்பெற்று வருகின்றது. இது தொடர்பாக அரசாங்க அதிபருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டு அரசாங்க அதிபரால் இவ்விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பாக கௌரவ தவிசாளரிடம் கோரப்பட்டது. தற்போது அங்கு அமைக்கப்பட்ட மதில், கட்டிட வேலை நிறுத்தப்பட்டுள்ளது என கௌரவ தவிசாளரால் தெரிவிக்கப்பட்ட விடயமும் அறிக்கையில் இடம்பெறவில்லை எனத் தெரிவித்ததுடன் மேற்படி திருத்தத்துடன் 16.06.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

❖ கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் காலை 10.10 மணிக்கு வருகை தந்தார்.

➢ அடுத்து 30.06.2022, 14.07.2022, 20.07.2022 ஆகிய திகதிகளில் நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டங்களின் சிபாரிசிற்கமைய கொடுப்பனவுகள் விபரம் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | Yaso Engineers & Contractors | Council-2022 நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Renovation of Chankanai vallai Road 9th Site Lane (Nariyiddan) வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | 430,754.00 |
| 02 | Yaso Egineers & Contractors | Council-2022 நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Renovation of Mill Lane 1st left Site Lane வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | 575,823.00 |
| 03 | Jana Civil Work | பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் PT நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Reconstruction of Thaiyiddipulam road வேலைக்கான 2வது பகுதிக் கொடுப்பனவு | 2.600.940.00 |
| 04 | Popular Motor Stores, Stanley Road, Jaffna | வாகனங்களின் ரயர் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 466,250.00 |
| 05 | Popular Motor Stores, Stanley Road, Jaffna | உழவு இயந்திரத்திற்கான ரயர் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 215,100.00 |
| 06 | North Construction, Chunnakam | JCB இயந்திரத்தினை தலைமை அலுவலகத்திலிருந்து அனுராதபுரம் கொண்டு சென்றமைக்கான கொடுப்பனவு | Rs 130,000.00 |
| 07 | SP Engineering, Vaddu South, Vaddukoddai | அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Construction of Boundary Wall at Seeravalai Compost Yard Stage - I வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 3,437,077.00 |
| 08 | SP Engineering, Vaddu South, Vaddukoddai | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Improvement of Stalls at Keerimalai Market வேலைக்கான முதலாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 2,539,107.00 |
| 09 | Jana Civil Work, Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Construction of Toilet at Kankesanthurai Market வேலைக்கான முதலாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 2,075,485.44 |

| | | | |
|---|---|---|---|
| 10 | Shagana Construction, 71/15, Karuveppulam Road, Kokuvil | சபைநிதி மூலம் (அபிவிருத்தி ஒதுக்கம்) மேற்கொள்ளப்பட்ட Construction of Myliddy Sub Office Building at Myliddy Stage II வேலைக்கான மூன்றாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 2,604,020.84 |
| 11 | யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகம் | படிவங்கள் அச்சிடப்பட்டமைக்கான கொடுப்பனவு | Rs 178,700.00 |
| 12 | அளவெட்டி கலைவாணி சனசமூக நிலையம், அளவெட்டி | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Improvement of facilities for Citizen Infront Offices with equipment and improved systems in Myliddy and Mallakam Sub Offices வேலைக்கான முதலாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 683,820.00 |
| 13 | Jana Civil Work, Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Construction of Toilet at Kankesanthurai Market வேலைக்கான இரண்டாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 1,036,731.08 |
| 14 | Yaso Engineers & Contractors, Eralai East, Eralai | சபைநிதி-2020 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Seenthipantal Preschool Lane வேலைக்கான பிடிபணம் | Rs 116,801.24 |

**தீர்மான இல: 01/21.07.2022**

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | Yaso Engineers & Contractors | Council-2022 நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Renovation of Chankanai vallai Road 9th Site Lane (Nariyiddan) வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | 430,754.00 |
| 02 | Yaso Egineers & Contractors | Council-2022 நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Renovation of Mill Lane 1st left Site Lane வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | 575,823.00 |
| 03 | Jana Civil Work | பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் PT நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Reconstruction of Thaiyiddipulam road வேலைக்கான 2வது பகுதிக் கொடுப்பனவு | 2,600,940.00 |
| 04 | Popular Motor Stores, Stanley Road, Jaffna | வாகனங்களின் ரயர் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 466,250.00 |
| 05 | Popular Motor Stores, Stanley Road, Jaffna | உழவு இயந்திரத்திற்கான ரயர் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 215,100.00 |
| 06 | North Construction, Chunnakam | JCB இயந்திரத்தினை தலைமை அலுவலகத்திலிருந்து அனுராதபுரம் கொண்டு சென்றமைக்கான கொடுப்பனவு | Rs 130,000.00 |
| 07 | SP Engineering, Vaddu South, Vaddukoddai | அபிவிருத்தி ஒதுக்க நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Construction of Boundary Wall at Seeravalai Compost Yard Stage - I வேலைக்கான முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 3,437,077.00 |
| 08 | SP Engineering, Vaddu South, Vaddukoddai | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Improvement of Stalls at Keerimalai Market வேலைக்கான முதலாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 2,539,107.00 |
| 09 | Jana Civil Work, Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Construction of Toilet at Kankesanthurai Market வேலைக்கான முதலாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 2,075,485.44 |
| 10 | Shagana Construction, 71/15, Karuveppulam Road, Kokuvil | சபைநிதி மூலம் (அபிவிருத்தி ஒதுக்கம்) மேற்கொள்ளப்பட்ட Construction of Myliddy Sub Office Building at Myliddy Stage II வேலைக்கான மூன்றாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 2,604,020.84 |
| 11 | யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகம் | படிவங்கள் அச்சிடப்பட்டமைக்கான கொடுப்பனவு | Rs 178,700.00 |
| 12 | அளவெட்டி கலைவாணி சனசமூக நிலையம், அளவெட்டி | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Improvement of facilities for Citizen Infront Offices with equipment and improved systems in Myliddy and Mallakam Sub Offices வேலைக்கான முதலாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 683,820.00 |
| 13 | Jana Civil Work, Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் Performance Tranche நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் Construction of Toilet at Kankesanthurai Market வேலைக்கான இரண்டாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 1,036,731.08 |
| 14 | Yaso Engineers & Contractors, Eralai East, Eralai | சபைநிதி-2020 மூலம் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Seenthipantal Preschool Lane வேலைக்கான பிடிபணம் | Rs 116,801.24 |

மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ❖ கௌரவ உறுப்பினர் சிவபாலசுந்தரம் ஹரிகரன் அவர்கள் காலை 10.16 மணிக்கு வருகை தந்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் எமது சபையின் பாவனையில் உள்ள Gully Emptier வாகனத்திற்கான ரயர்கள் கொள்வனவிற்காக அதிகளவு கட்டணம் அறவிட்டமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக வினாவினார்.

- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் குறித்த விடயம் தொடர்பாக நுகர்வோர் அதிகார சபையினருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. குறித்த தொகையினை வழங்குமாறு அவர்களால் குறித்த நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

- ❖ கௌரவ உறுப்பினர்களான பாக்கியநாதர் மரியதாஸ், சுபாஸ்கரன் சந்திரமதி ஆகியோர் காலை 10.19 மணிக்கு கௌரவ தவிசாளரின் அனுமதியினை பெற்று சபையிலிருந்து வெளியேறினர்.

➢ காங்கேசன்துறையில் LDSP திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்ட பின்வரும் மாட்டிறைச்சிக்கடை, கருவாட்டுக்கடைகள் என்பவற்றினை 15.08.2022 தொடக்கம் 31.12.2022 வரையான காலப்பகுதிக்கு பின்வரும் அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோருவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| | | ஆரம்ப கேள்வித் தொகை | கடை வாடகை |
|---|---|---|---|
| 01 | மாட்டிறைச்சிக் கடை | ரூ 25,000.00 | ரூ 1200.00 |
| 02 | கருவாட்டுக் கடை இல 01 | ரூ 10,000.00 | ரூ 1200.00 |
| 03 | கருவாட்டுக் கடை இல 02 | ரூ 10,000.00 | ரூ 1200.00 |

**தீர்மான இல :- 02/21.07.2022**

காங்கேசன்துறையில் LDSP திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்ட பின்வரும் மாட்டிறைச்சிக்கடை, கருவாட்டுக்கடைகள் என்பவற்றினை 15.08.2022 தொடக்கம் 31.12.2022 வரையான காலப்பகுதிக்கு பின்வரும் அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி கோருவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| | | ஆரம்ப கேள்வித் தொகை | கடை வாடகை |
|---|---|---|---|
| 01 | மாட்டிறைச்சிக் கடை | ரூ 25,000.00 | ரூ 1200.00 |
| 02 | கருவாட்டுக் கடை இல 01 | ரூ 10,000.00 | ரூ 1200.00 |
| 03 | கருவாட்டுக் கடை இல 02 | ரூ 10,000.00 | ரூ 1200.00 |

- ❖ கௌரவ உறுப்பினர் சொக்கலிங்கம் சபேசன் அவர்கள் காலை 10.26 மணிக்கு கௌரவ தவிசாளரின் அனுமதியினை பெற்று சபையிலிருந்து வெளியேறினார்.

➢ பிரதம செயலாளர் தலைமையில் 2022.04.07 ஆம் திகதி நடைபெற்ற நான்காவது Provincial Steering Committee இன் அனுமதிக்கமைவாக LDSP திட்டத்தின் 2ஆம் மற்றும் 3ஆம் கட்ட நிதியின் மூலம் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்காக நியமிக்கப்பட்ட Key Staff மற்றும் குறித்த திட்ட வேலைகளில் ஈடுபடும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்களுக்கு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட மேற்பார்வைச் செலவு 1.5% இனை பின்வரும் அடிப்படையில் கொடுப்பனவு செய்ய சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| பெயர் | பதவி | வீதம் | 2nd BT கொடுப்பனவு தொகை | 3rd BT கொடுப்பனவுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| திரு.இ.பகீரதன் | செயலாளர் | 25% | 34,087.50 | 34,526.89 | 68,614.39 |
| திரு.இ.சுகர்ணன் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 20% | 27,270.00 | ----- | 27,270.00 |
| திரு.ச.தர்சிந்தன் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 20% | ----- | 27,621.50 | 27,621.50 |
| திருமதி.செ.சிவயோகம் | சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் | 10% | 13,635.00 | 13,810.76 | 27,445.76 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செல்வி.தெ.பிரணவி | விடய உத்தியோகத்தர் - பெறுகை | 10% | 13,635.00 | 13,810.76 | 27,445.76 |
| திருமதி.இ.தவரஞ்சனி | விடய உத்தியோகத்தர் - நிதி | 10% | 13,635.00 | 13,810.76 | 27,445.76 |
| திரு.பொ.ஜனகன் | பி.உ.உ.ஆ.அலுவலக வேலை அத்தியட்சகர் | 15% | 20,452.50 | 20,716.12 | 41,168.62 |
| விடய உத்தியோகத்தர் | பி.உ.உ.ஆ.அலுவலக விடய உத்தியோகத்தர் | 10% | 13,635.00 | 13,810.76 | 27,445.76 |

**தீர்மான இல :- 03/21.07.2022**

பிரதம செயலாளர் தலைமையில் 2022.04.07 ஆம் திகதி நடைபெற்ற நான்காவது Provincial Steering Committee இன் அனுமதிக்கமைவாக LDSP திட்டத்தின் 2ஆம் மற்றும் 3ஆம் கட்ட நிதியின் மூலம் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்காக நியமிக்கப்பட்ட Key Staff மற்றும் குறித்த திட்ட வேலைகளில் ஈடுபடும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர்களுக்கு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட மேற்பார்வைச் செலவு 1.5% இனை பின்வரும் அடிப்படையில் கொடுப்பனவு செய்ய அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| பெயர் | பதவி | வீதம் | 2nd BT கொடுப்பனவு தொகை | 3rd BT கொடுப்பனவுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| திரு.இ.பகீரதன் | செயலாளர் | 25% | 34,087.50 | 34,526.89 | 68,614.39 |
| திரு.இ.சுகர்ணன் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 20% | 27,270.00 | ----- | 27,270.00 |
| திரு.ச.தர்சிந்தன் | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 20% | ----- | 27,621.50 | 27,621.50 |
| திருமதி.செ.சிவயோகம் | சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் | 10% | 13,635.00 | 13,810.76 | 27,445.76 |
| செல்வி.தெ.பிரணவி | விடய உத்தியோகத்தர் - பெறுகை | 10% | 13,635.00 | 13,810.76 | 27,445.76 |
| திருமதி.இ.தவரஞ்சனி | விடய உத்தியோகத்தர் - நிதி | 10% | 13,635.00 | 13,810.76 | 27,445.76 |
| திரு.பொ.ஜனகன் | பி.உ.உ.ஆ.அலுவலக வேலை அத்தியட்சகர் | 15% | 20,452.50 | 20,716.12 | 41,168.62 |
| விடய உத்தியோகத்தர் | பி.உ.உ.ஆ.அலுவலக விடய உத்தியோகத்தர் | 10% | 13,635.00 | 13,810.76 | 27,445.76 |

- ➢ எமது சபைக்கு சொந்தமான றோலர் வாகன திருத்தத்திற்காக United Tractor & Equipment Pvt Ltd நிறுவனத்திடமிருந்து ரூபா 3,201,688.73 இற்கான மதிப்பீடு பெறப்பட்டு இயந்திர பொறியியலாளரின் சிபாரிசும் கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும் குறித்த திருத்தத்தினை மேற்கொள்வதற்கு முழுத்தொகை ரூபா 3,201,688.73 இனை முற்பணமாக செலுத்துமாறும் அதற்கு முற்பண பிணையினை வங்கி ஊடாக வழங்குவதாகவும் குறித்த நிறுவனத்தினால் அறியத்தரப்பட்டுள்ளது. எனவே குறித்த நிறுவனத்திற்கு ரூபா 3,201,688.73 இனை முற்பணமாக செலுத்த சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

- ❖ கௌரவ உபதவிசாளர் பொன்னம்பலம் இராசேந்திரம் அவர்கள் தற்போதைய சூழ்நிலையில் பொருட்களின் விலை அதிகமாக இருப்பதனால் இத்திருத்தங்களை சிறு காலத்தின் பின் மேற்கொள்ள முடியுமா என வினாவினார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் இனிவரும் காலங்களில் பொருட்களின் விலை அதிகரித்து செல்லும் வாய்ப்பு உள்ளமையால் அத் திருத்தங்களை தற்போது செய்வதே பொருத்தமாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 04/21.07.2022**

எமது சபைக்கு சொந்தமான றோலர் வாகன திருத்தத்திற்காக United Tractor & Equipment Pvt Ltd நிறுவனத்திடமிருந்து ரூபா 3,201,688.73 இற்கான மதிப்பீடு பெறப்பட்டு இயந்திர பொறியியலாளரின் சிபாரிசும் கிடைக்கப் பெற்றுள்ளது. மேலும் குறித்த திருத்தத்தினை மேற்கொள்வதற்கு முழுத்தொகை ரூபா 3,201,688.73 இனை முற்பணமாக செலுத்துமாறும் அதற்கு முற்பண பிணையினை வங்கி ஊடாக வழங்குவதாகவும் குறித்த நிறுவனத்தினால் அறியத்தரப்பட்டுள்ளது. எனவே குறித்த நிறுவனத்திற்கு ரூபா 3,201,688.73 இனை முற்பணமாக செலுத்த அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- எமது சபையின் ZA 5195 இலக்க JCB வாகனம் அநுராதபுரத்திற்கு Avansmart Company க்கு அனுப்பப்பட்டு அதற்கு திருத்த வேலைக்கான மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. முதற்கட்டமாக குறித்த JCB வாகனத்தினை இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கு ரூபா 623,836.24 இற்கான மதிப்பீடு குறித்த நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இயங்கு நிலைக்கு கொண்டு வந்த பின்னர் அதனை Mechanical Service செய்து முழுமையாக திருத்தம் செய்வதற்கான மதிப்பீடு குறித்த நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படும் எனவும் அறியத் தரப்பட்டுள்ளது. எனவே குறித்த வாகனத்தினை இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு ரூபா 623,836.24 க்கு திருத்தம் செய்வதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 05/21.07.2022**

எமது சபையின் ZA 5195 இலக்க JCB வாகனம் அநுராதபுரத்திற்கு Avansmart Company க்கு அனுப்பப்பட்டு அதற்கு திருத்த வேலைக்கான மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. முதற்கட்டமாக குறித்த JCB வாகனத்தினை இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கு ரூபா 623,836.24 இற்கான மதிப்பீடு குறித்த நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இயங்கு நிலைக்கு கொண்டு வந்த பின்னர் அதனை Mechanical Service செய்து முழுமையாக திருத்தம் செய்வதற்கான மதிப்பீடு குறித்த நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படும் எனவும் அறியத் தரப்பட்டுள்ளது. எனவே குறித்த வாகனத்தினை இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு ரூபா 623,836.24 க்கு திருத்தம் செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- LDSP திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கீரிமலை உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான விற்பனை நிலையம் மேம்படுத்தல் வேலைகள் நிறைவு பெற்றுள்ளது. குறித்த விற்பனை நிலையத்தினை பனை தென்னை கூட்டுறவு சங்கம் தமது உள்ளூர் உற்பத்திகளினை விற்பனை செய்வதற்கு கோரியுள்ளது. எனவே உள்ளூர் உற்பத்தி பொருட்களினை விற்பனை செய்வதற்கு விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் ஊடாக மதிப்பீட்டிற்கமைய வழங்குவதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 06/21.07.2022**

LDSP திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கீரிமலை உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான விற்பனை நிலையம் மேம்படுத்தல் வேலைகள் நிறைவு பெற்றுள்ளது. குறித்த விற்பனை நிலையத்தினை பனை தென்னை கூட்டுறவு சங்கம் தமது உள்ளூர் உற்பத்திகளினை விற்பனை செய்வதற்கு கோரியுள்ளது. எனவே உள்ளூர் உற்பத்தி பொருட்களினை விற்பனை செய்வதற்கு விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் ஊடாக மதிப்பீட்டிற்கமைய வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- 2021 ஆம் ஆண்டுக்கான கணீப்பீட்டுச்சபையின் சிபார்சுக்கமைவாக கீழ்வரும் விபரத்திற்கமைவான பொருட்கள், நூல்கள் என்பனவற்றை ஏலவிற்பனை மற்றும் அழிப்பு செய்வதற்கும் அவற்றினை பதிவேடுகளிலிருந்து நீக்குவதற்குமான சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**அழிப்புச் செய்வதற்காக வகைக்குறிக்கப்பட்ட பொருட்களின் விபரம்**

| தலைமை அலுவலகம் | | | |
|---|---|---|---|
| **இல** | **பொருள் விபரம்** | **எண்** | **இருப்பு பக்கம்** |
| 01 | Rubber Stamp - Sec | 01 | 88 |
| 02 | Rubber Stamp - Chairman | 01 | 88 |
| 03 | Calculator | 04 | 92 |
| 04 | Stapler | 01 | 111 |
| 05 | Wall Clock | 01 | 106 |
| 06 | Wireless Mouse | 01 | 121 |
| 07 | Rubber Stamp – CMA (E) | 01 | 96 |
| 08 | Rubber Stamp - CMA (T) | 01 | 96 |

| Tellippalai – Sub Office | | | |
|---|---|---|---|
| இல | பொருள் விபரம் | எண் | இருப்பு பக்கம் |
| 01 | Table Glass | 01 | 05 |
| 02 | Calculator | 01 | 05 |
| 03 | Pad Lock | 03 | 06 |

| Kankesanthurai – Sub Office | | | |
|---|---|---|---|
| இல | பொருள் விபரம் | எண் | இருப்பு பக்கம் |
| 01 | Rubber Stamp | 01 | 26 |

| Mallakam – Sub Office | | | |
|---|---|---|---|
| இல | பொருள் விபரம் | எண் | இருப்பு பக்கம் |
| 01 | Key Board | 01 | 09 |
| 02 | Roll Plug | 01 | 05 |

| Myliddy – Sub Office | | | |
|---|---|---|---|
| இல | பொருள் விபரம் | எண் | இருப்பு பக்கம் |
| 01 | Calculator | 01 | 05 |

**ஏல விற்பனை செய்வதற்காக வகைக்குறிக்கப்பட்ட பொருட்களின் விபரம்**

| தலைமை அலுவலகம் | | | |
|---|---|---|---|
| இல | பொருள் விபரம் | எண் | இருப்பு பக்கம் |
| 01 | Table | 01 | 117 |
| 02 | Fax Machine | 01 | 78 |
| 03 | Water Dispenser | 01 | 114 |
| 04 | Monitor | 01 | 100 |
| 05 | CPU | 01 | 100 |
| 06 | Filling Cabinet – 4 Drawer | 02 | 104 |
| 07 | Plastic Chair | 04 | 104 |
| 08 | Coffee table | 01 | 111 |
| 09 | Chair - Hassan | 01 | 99 |

➢ **அழிப்புச் செய்வதற்காக வகைக்குறிக்கப்பட்ட நூல்கள்.**

**பொது நூலகம் - அளவெட்டி**

1. 194 – வாழ்க்கையும் விளையாட்டும்
2. 196 – மலையக மக்களும் எதிர்காலமும்
3. 202 – கர்நாடக சங்கீதம்
4. 238 – Lifcos Great Little Books
5. 253 – English Work Book
6. 905 – ஒரு குரல்
7. 115 – காதல் ஒத்திகை

**பொது நூலகம் - காங்கேசன்துறை.**

1. 799 - முந்தானை தொட்டில்

- ❖ கௌரவ உப தவிசாளர் பொன்னம்பலம் இராசேந்திரம் அவர்கள் புத்தகங்களை அழிப்பது தொடர்பாக எவ்வாறு தீர்மானம் மேற்கொள்ளப்படுகின்றது என கேட்டார்.
- ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் வருடாந்த இருப்பு கணிப்பீடு செய்து அழிப்பு சபையால் தெரியப்பட்டு அழிப்புச் செய்யப்படுகின்றது எனத் தெரிவித்தார்.
- ❖ கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் பாவிக்கமுடியாத புத்தகங்களை தெரிவு செய்து அழிப்பு சபையின் சிபாரிசுக்கமைய அழிப்புச் செய்யப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

**தீர்மான இல :- 07/21.07.2022**

2021 ஆம் ஆண்டுக்கான கணீப்பீட்டுச்சபையின் சிபார்சுக்கமைவாக கீழ்வரும் விபரத்திற்கமைவான பொருட்கள், நூல்கள் என்பனவற்றை ஏலவிற்பனை மற்றும் அழிப்பு செய்வதற்கும் அவற்றினை பதிவேடுகளிலிருந்து நீக்குவதற்குமான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் முன்மொழிய கௌரவ

உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**அழிப்புச் செய்வதற்காக வகைக்குறிக்கப்பட்ட பொருட்களின் விபரம்**

| தலைமை அலுவலகம் | | | |
|---|---|---|---|
| **இல** | **பொருள் விபரம்** | **எண்** | **இருப்பு பக்கம்** |
| 01 | Rubber Stamp - Sec | 01 | 88 |
| 02 | Rubber Stamp - Chairman | 01 | 88 |
| 03 | Calculator | 04 | 92 |
| 04 | Stapler | 01 | 111 |
| 05 | Wall Clock | 01 | 106 |
| 06 | Wireless Mouse | 01 | 121 |
| 07 | Rubber Stamp – CMA (E) | 01 | 96 |
| 08 | Rubber Stamp - CMA (T) | 01 | 96 |

| Tellippalai – Sub Office | | | |
|---|---|---|---|
| **இல** | **பொருள் விபரம்** | **எண்** | **இருப்பு பக்கம்** |
| 01 | Table Glass | 01 | 05 |
| 02 | Calculator | 01 | 05 |
| 03 | Pad Lock | 03 | 06 |

| Kankesanthurai – Sub Office | | | |
|---|---|---|---|
| **இல** | **பொருள் விபரம்** | **எண்** | **இருப்பு பக்கம்** |
| 01 | Rubber Stamp | 01 | 26 |

| Mallakam – Sub Office | | | |
|---|---|---|---|
| **இல** | **பொருள் விபரம்** | **எண்** | **இருப்பு பக்கம்** |
| 01 | Key Board | 01 | 09 |
| 02 | Roll Plug | 01 | 05 |

| Myliddy – Sub Office | | | |
|---|---|---|---|
| **இல** | **பொருள் விபரம்** | **எண்** | **இருப்பு பக்கம்** |
| 01 | Calculator | 01 | 05 |

**ஏல விற்பனை செய்வதற்காக வகைக்குறிக்கப்பட்ட பொருட்களின் விபரம்**

| தலைமை அலுவலகம் | | | |
|---|---|---|---|
| **இல** | **பொருள் விபரம்** | **எண்** | **இருப்பு பக்கம்** |
| 01 | Table | 01 | 117 |
| 02 | Fax Machine | 01 | 78 |
| 03 | Water Dispenser | 01 | 114 |
| 04 | Monitor | 01 | 100 |
| 05 | CPU | 01 | 100 |
| 06 | Filling Cabinet – 4 Drawer | 02 | 104 |
| 07 | Plastic Chair | 04 | 104 |
| 08 | Coffee table | 01 | 111 |
| 09 | Chair - Hassan | 01 | 99 |

- **அழிப்புச் செய்வதற்காக வகைக்குறிக்கப்பட்ட நூல்கள்.**

**பொது நூலகம் - அளவெட்டி**

1. 194 – வாழ்க்கையும் விளையாட்டும்
2. 196 – மலையக மக்களும் எதிர்காலமும்
3. 202 – கர்நாடக சங்கீதம்
4. 238 – Lifcos Great Little Books
5. 253 – English Work Book
6. 905 – ஒரு குரல்
7. 115 – காதல் ஒத்திகை

**பொது நூலகம் - காங்கேசன்துறை.**

1.799 - முந்தானை தொட்டில்

- 2022 ஆம் ஆண்டிற்கான முதலாவது வாக்குப்பணமாற்றம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**முதலாவது வாக்குப்பணமாற்ற வரவு செலவுத்திட்டம்-2022.07.21**

| Nrkpg;G | | | | nrytpdk; | | |
|---|---|---|---|---|---|---|
| இல. | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை |
| 1 | 1-104-2 | Vida epiyahd nrhj;Jf;fisg; gOJ ghHj;jYk; NgzYk; | 500,000.00 | 3.304-1 | வாகனங்கள் ,இயந்திரங்கள், உபகரணங்களைப் பழுதுபார்த்தல் | 2,000,000.00 |
| 2 | 3-304-4 | tPjpfisg; guhkupj;jYk; NgzYk;) | 500,000.00 | | | |
| 3 | 3-306-2 | tl;b (LLDF) | 200,000.00 | | | |
| 4 | 5-504-2 | Vida epiyahd nrhj;Jf;fisg; gOJ ghHj;jYk; NgzYk; | 600,000.00 | | | |
| 5 | 6-604-2 | Vidaepiyahd nrhj;Jf;fisg; gOJ ghHj;jYk; NgzYk; | 200,000.00 | | | |
| 6 | 3-303-2 | vupnghUs; cuha;TePf;fpfs; | 500,000.00 | 2-203-2 | vupnghUs; cuha;TePf;fpfs; | 500,000.00 |
| | மொத்தம் | | **2,500,000.00** | | | **2,500,000.00** |

**தீர்மான இல :- 08/21.07.2022**

2022 ஆம் ஆண்டிற்கான முதலாவது வாக்குப்பணமாற்றத்திற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.


**முதலாவது வாக்குப்பணமாற்ற வரவு செலவுத்திட்டம்-2022.07.21**

| Nrkpg;G | | | | nrytpdk; | | |
|---|---|---|---|---|---|---|
| இல. | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை | செலவினத் தலைப்பு | விபரம் | தொகை |
| 1 | 1-104-2 | Vida epiyahd nrhj;Jf;fisg; gOJ ghHj;jYk; NgzYk; | 500,000.00 | 3.304-1 | வாகனங்கள் ,இயந்திரங்கள், உபகரணங்களைப் பழுதுபார்த்தல் | 2,000,000.00 |
| 2 | 3-304-4 | tPjpfisg; guhkupj;jYk; NgzYk;) | 500,000.00 | | | |
| 3 | 3-306-2 | tl;b (LLDF) | 200,000.00 | | | |
| 4 | 5-504-2 | Vida epiyahd nrhj;Jf;fisg; gOJ ghHj;jYk; NgzYk; | 600,000.00 | | | |
| 5 | 6-604-2 | Vidaepiyahd nrhj;Jf;fisg; gOJ ghHj;jYk; NgzYk; | 200,000.00 | | | |
| 6 | 3-303-2 | vupnghUs; cuha;TePf;fpfs; | 500,000.00 | 2-203-2 | vupnghUs; cuha;TePf;fpfs; | 500,000.00 |
| | மொத்தம் | | **2,500,000.00** | | | **2,500,000.00** |


- பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் செயற்திறன் பரிமாற்ற நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும் பின்வரும் வேலைகளை ஒப்பந்தம் மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கு தீர்மான இல 07/2022.06.16 இன் பிரகாரம் சபை அனுமதி பெறப்பட்டிருந்தது. எனவே குறித்த ஒப்பந்த தொகைக்கமைவாக திட்ட ஒதுக்கீட்டுக்கு மேலதிகமான தொகையினை சபை நிதியிலிருந்து வழங்குவதற்கு சபையின் தழுவு அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| S. No | Name of Work | Allocation | Estimated Cost | Contract Amount +VAT | Council Participation | Contractor name |
|---|---|---|---|---|---|---|
| 1 | Construction of Toilet at Kankesanthurai Market | 2 Mn | 2.38Mn | 4.51 Mn | 2.51Mn | Jana Civil Work |
| 2 | Improvement of stalls at keerimalai market | 2 Mn | 2.07Mn | 3.02Mn | 1.02Mn | SP Engineering |
| 3 | Reconstruction of Thaiyiddipulam Road | 7.95 Mn | 5.82Mn | 11 Mn | 3.05Mn | Jana Civil Work |

**தீர்மான இல :- 09/21.07.2022**

பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் செயற்திறன் பரிமாற்ற நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும் பின்வரும் வேலைகளை ஒப்பந்தம் மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கு தீர்மான இல 07/2022.06.16 இன் பிரகாரம் சபை அனுமதி பெறப்பட்டிருந்தது. எனவே குறித்த ஒப்பந்த தொகைக்கமைவாக திட்ட ஒதுக்கீட்டுக்கு மேலதிகமான தொகையினை சபை

நிதியிலிருந்து வழங்குவதற்கு தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| S. No | Name of Work | Allocation | Estimated Cost | Contract Amount +VAT | Council Participation | Contractor name |
|---|---|---|---|---|---|---|
| 1 | Construction of Toilet at Kankesanthurai Market | 2 Mn | 2.38Mn | 4.51 Mn | 2.51Mn | Jana Civil Work |
| 2 | Improvement of stalls at keerimalai market | 2 Mn | 2.07Mn | 3.02Mn | 1.02Mn | SP Engineering |
| 3 | Reconstruction of Thaiyiddipulam Road | 7.95 Mn | 5.82Mn | 11 Mn | 3.05Mn | Jana Civil Work |

- வட்டாரம் - 20, யாழ்ப்பாண வீதியில் ஆதன இல 170, 178 நவரத்தினம் கைம்பெண் சர்வாம்பிகை என்பவரது பெயரில் எமது ஆதன இடாப்பில் உள்ள ஆதனத்தின் உரிமை மாற்றத்திற்காக நவரத்தினம் நரேந்திரன் விண்ணப்பித்திருந்தார். இவ் உரிமை மாற்றத்திற்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்திய போது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாமையால் விண்ணப்பதாரியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 10/21.07.2022**
வட்டாரம் - 20, யாழ்ப்பாண வீதியில் ஆதன இல 170, 178 நவரத்தினம் கைம்பெண் சர்வாம்பிகை என்பவரது பெயரில் எமது ஆதன இடாப்பில் உள்ள ஆதனத்தின் உரிமை மாற்றத்திற்காக நவரத்தினம் நரேந்திரன் விண்ணப்பித்திருந்தார். இவ் உரிமை மாற்றத்திற்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்திய போது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாமையால் விண்ணப்பதாரியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- வட்டாரம் - 20, பங்களா வீதியில் ஆதன இல 17 நவரத்தினம் கைம்பெண் சர்வாம்பிகை என்பவரது பெயரில் எமது ஆதன இடாப்பில் உள்ள ஆதனத்தின் உரிமை மாற்றத்திற்காக நவரத்தினம் நரேந்திரன் விண்ணப்பித்திருந்தார். இவ் உரிமை மாற்றத்திற்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்திய போது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாமையால் விண்ணப்பதாரியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 11/21.07.2022**
வட்டாரம் - 20, பங்களா வீதியில் ஆதன இல 17 நவரத்தினம் கைம்பெண் சர்வாம்பிகை என்பவரது பெயரில் எமது ஆதன இடாப்பில் உள்ள ஆதனத்தின் உரிமை மாற்றத்திற்காக நவரத்தினம் நரேந்திரன் விண்ணப்பித்திருந்தார். இவ் உரிமை மாற்றத்திற்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்திய போது எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாமையால் விண்ணப்பதாரியின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வணிகமானி பட்டப்படிப்பினை தொடர்கின்ற திரு.கே.ரிசகேசன் அவர்கள் எமது சபையில் பயிற்சி பெறுவதற்கு கோரிக்கை கடிதத்தினை சமர்ப்பித்துள்ளார். அவர்களை 15.08.2022 ஆந் திகதியிலிருந்து 14.02.2023 ஆந் திகதி வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு எமது சபையில் பயிற்சியாளர்களாக இணைத்துக் கொள்வதற்கும் சபை நிதி மூலம் நாளாந்தம் ரூபா 500 கொடுப்பனவு வழங்குவதற்கும் சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 12/21.07.2022**
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வணிகமானி பட்டப்படிப்பினை தொடர்கின்ற திரு.கே.ரிசகேசன் அவர்கள் எமது சபையில் பயிற்சி பெறுவதற்கு கோரிக்கை கடிதத்தினை சமர்ப்பித்துள்ளார். அவர்களை 15.08.2022 ஆந் திகதியிலிருந்து 14.02.2023 ஆந் திகதி வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு எமது சபையில் பயிற்சியாளர்களாக இணைத்துக் கொள்வதற்கும் சபை நிதி

மூலம் நாளாந்தம் ரூபா 500 கொடுப்பனவு வழங்குவதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- அளவெட்டி மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு எரிபொருள் கொள்வனவிற்காக சுற்றுநிருபத்திற்கமைவாக ரூபா 1.00 Mn இனை முற்பணமாக வழங்கியமைக்கான சபையின் தழுவு அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 13/21.07.2022**
அளவெட்டி மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு எரிபொருள் கொள்வனவிற்காக ரூபா 1.00 Mn இனை முற்பணமாக வழங்கியமைக்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- அடுத்து 2022 ஆம் ஆண்டுக்கான யூன் மாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு யூன் மாதத்திற்கான கணக்கறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சசிகலாதேவி ரவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- அடுத்து 16.06.2022 ஆம் திகதி நடைபெற்ற வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.
  - இக்குழுவின் தலைவராக கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ் அவர்கள் தெரிவு செய்யப்படார்.
  - தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள வீட்டுத்தோட்டம் அமைத்து குறுகிய காலத்தில் பயனளிக்கக்கூடிய விதைகளை பயிரிட்டு வீட்டுத் தேவைக்குப் பயன்படுத்துவதுடன் சந்தைப்படுத்தவும் முடியும். இதற்காக எமது பிரதேசங்களில் வீட்டுத் தோட்டம் செய்வதில் ஆர்வம் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு விதைகளை வழங்கி சந்தைப்படுத்தலுக்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.
  - எமது பிரதேசங்களில் பயன்படுத்தப்படாத விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருத்தமான காணிகளை இனங்கண்டு அவற்றை சுத்தப்படுத்தி விவசாயம் செய்வதுடன் உரிமையாளர்களிடம் தண்டப்பணம், சுத்தப்படுத்தலுக்கான செலவு ஆகியவற்றை அறவிட்டு காணிகளை மீள ஒப்படைக்க முடியும்.

- அடுத்து ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

  - கௌரவ உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன் அவர்கள் தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டு வருவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக வினாவினார்.
  - கௌரவ தவிசாளர் அவர்கள் குறித்த விகாரை அமைக்கப்படும் காணி உரிமையாளர்களை தெரியவில்லை எனத் தெரிவித்தார்.
  - கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் குறித்த விகாரை சபையின் அனுமதி பெறப்படாமல் அமைக்கப்படுவதால் கட்டிட வேலைகளை நிறுத்த முடியாதா என வினாவினார்.
  - கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் சுற்றாடலில் உள்ள மக்களுக்கு பாதிப்பு என்ற வகையில் பொது நல வழக்கு தொடர முடியும் எனத் தெரிவித்தார்.
  - கௌரவ தவிசாளர் அவர்கள் குறித்த பகுதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளது. குறித்த பகுதி விடுவிக்கப்பட்டாலே நடவடிக்கை மேற்கொள்ள முடியும். விகாரைக்கு அருகில் உள்ள காணி உரிமையாளர்கள் சிலர் தங்களுடைய காணிகளை விடுவிக்குமாறு வழக்கு பதிவு செய்து அவ் வழக்குகள் நடைபெற்று வருகின்றது. ஏற்கனவே விகாராதிபதிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.
  - கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் உயர் பாதுகாப்பு வலயத்தில் அனுமதி பெறப்படாமல் புதிய கட்டடம் அமைக்கப்படுவது தொடர்பாக விகாராதிபதிக்கு கடிதம் அனுப்ப வேண்டும் எனத் தெரிவித்தார்.

இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 14/21.07.2022**
தையிட்டி தெற்கு J/250 கிராம சேவையாளர் பிரிவில் விகாரைக்குரிய காணி அல்லாமல் தனியாருக்குரிய காணியில் விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அதனை உடனடியாக நிறுத்த

வேண்டுமெனவும், விகாரைக்குரிய காணியில் சபையின் உரிய அனுமதியினைப் பெற்று விகாரை அமைக்கப்படவேண்டும் என கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- இத் தீர்மானத்தை அதி மேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி, விகாராதிபதி, யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு கடிதம் மூலம் அனுப்ப வேண்டும் எனவும் சபையால் தீர்மானிக்கப்பட்டது.

❖ கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் சபை உறுப்பினர்களுக்கு எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ள முடியாதா எனக் கேட்டார்.

❖ கௌரவ தவிசாளர் அவர்கள் தேசிய ரீதியில் வாகன இறுதி இலக்கத்தின் அடிப்படையிலும் QR முறைமையிலும் எரிபொருள் விநியோகம் இடம்பெற்று வருகிறது எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் எமது பிரதேசத்தின் மீள்குடியேற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 17/19.05.2022 ஆம் இலக்க தீர்மானத்தினை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சீ.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கௌரவ பிரதம மந்திரி அவர்களுக்கு மொழிபெயர்ப்பு செய்து அனுப்பியமை தொடர்பாக எமது நன்றிகளை தெரிவிப்பதுடன் எமது புதிய ஜனாதிபதி கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு பலாலி விமான நிலையம் மீள செயற்படுத்தல், மீள்குடியேற்றம், கப்பல் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தல், காணி விடுவிப்பு தொடர்பாக எமது கோரிக்கைகளை சமர்ப்பிக்கலாம் எனத் தெரிவித்தார்.

இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல :- 15/21.07.2022**
எமது பிரதேசத்தில் உள்ள பலாலி சர்வதேச விமான நிலையத்தினை மீள செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எமது மக்கள் கடந்த 32 வருடங்களாக சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து மீளகுடியேற முடியாமல் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். எனவே அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறுவதற்காக அவர்களின் காணிகள் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் காங்கேசன்துறையிலிருந்து - இந்தியாவிற்கு கப்பல் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- இத் தீர்மானத்தை அதி மேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி, யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு கடிதம் மூலம் அனுப்ப வேண்டும் எனவும் சபையால் தீர்மானிக்கப்பட்டது.

❖ கௌரவ உறுப்பினர்களான சேனாதிராசா கலையமுதன், இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா ஆகியோர் காலை 11.14 மணிக்கு கௌரவ தவிசாளரின் அனுமதியினை பெற்று சபையிலிருந்து வெளியேறினர்.

❖ கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் மயானங்கள் துப்பரவு செய்யப்பட்டமையையும் ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு கீரிமலை கேணி துப்பரவு செய்யப்பட்டுள்ளமையையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது இவற்றிற்காக கௌரவ தவிசாளருக்கு நன்றிகளை தெரிவிப்பதுடன் கேணியில் பாசி அகற்றும் செயற்பாட்டினை வாராவாரம் செய்வதுடன் அருகிலுள்ள கழிவுகற்களை அகற்ற நடவடிக்கை மேற்கொண்டால் சிறப்பாக இருக்கும். கடந்த இரு வருடங்கள் கொவிட் காரணமாக ஆடி அமாவாசை தினத்தில் மக்களை கீரிமலை கேணி பகுதிகளில் அனுமதிக்காததனால் இவ்வருடம் அதிகளவான மக்கள் வருகை தர வாய்ப்பு இருப்பதனால் வாகனத்தரிப்பிடங்கள் அதிகளவில் அமைக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் தெல்லிப்பளை வாகனத்தரிப்பிடத்தில் பள்ளமாக இருப்பதனால் மக்கள் செல்ல சிரமப்படுவதனால்

அதனை சமப்படுத்தவும் துவிச்சக்கரவண்டிகள் நிறுத்துவதற்கு கொட்டகை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

- கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா அவர்கள் பலாலி விமான நிலையத்தை மீள செயற்படுத்தல், கப்பல் போக்குவரத்து என்பன தொடர்பாக கடந்த அரசின் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும் எரிபொருள் பிரச்சினை காரணமாக அவை நிறுத்தப்பட்டிருந்தது எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் எமது பிரதேசத்திலுள்ள வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்காக அன்பளிப்பையும் சபையின் செயற்பாடுகளை கௌரவிக்கும் முகமாக இன்றைய உபசரணையையும் லிங்கம் நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் தாமாக முன்வந்து மக்களின் வறுமையை உணர்ந்து அவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்காக அன்பளிப்பை வழங்கி சிறப்பான செயற்பாட்டை ஆரம்பித்துள்ளனர். அதற்காகவும் இன்றைய உபசரணையை வழங்கியமைக்காகவும் சபை சார்பாக நன்றி தெரிவித்தார்.

இத்துடன் கூட்டமானது காலை 11.28 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

ஒப்பம்: இ.பகீரதன்
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

ஒப்பம்: சோ.சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை
காங்கேசன்துறை.